40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. மாலன் என்பவரின் மகன் சிவராமன் பத்தாம் வகுப்பில் 500க்கு 465 மதிப்பெண்கள் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப் பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 15.5.2004. அவர் தமிழ்ப்பாடத்தில் 94, ஆங்கிலப் பாடத்தில் 85, கணிதப் பாடத்தில் 94, அறிவியல் பாடத்தில் 96, சமூக அறிவியல் பாடத்தில் 96 மதிப்பெண்களும் பெற்றுள்ளார். அவருடைய பத்தாம் வகுப்பு மதிப்பெண் 6556788. கடந்த 2019 மார்ச் மாதம் அவர் பத்தாம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய தாயாரின் பெயர் கற்பகம். 36, தெற்குத்தெரு, காந்திநகர் மதுரை என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். தேர்வர் தன்னை சிவராமனாக பாவித்து கொடுக்கப்பட்டுள்ள உரிய படிவத்தினை நிரப்பவும்.

42. அ) பள்ளியைத் தூய்மையாக வைத்திருக்க உதவும் ஐந்து திட்டங்களை எழுதுக. (அல்லது)
மொழி பெயர்க்க.
1) Education is what remains after one has forgotten what one has learned in school
- Albert Einstein
2) Tomorrow is often the busiest day of week. - Spanish proverb

**குறிப்பு செவி மாற்றுத் திறனாளர்களுக்காக மாற்றுவினா உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்சீர்த்தி, பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்று முறையையும் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும் சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை.

**வினாக்கள்**
1) மெய்க்கீர்த்தி என்றால் என்ன?
2) மெய்க்கீர்த்தியில் சிறப்பாக எழுதுவது என்ன?
3) தொடக்கத்தில் யாருடைய சாசனங்களில் ஆட்சியாண்டு கூறப்பட்டது?
4) மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் எந்த மன்னர் பரம்பரையில் இருந்தது.
5) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமாமன தலைப்பு ஒன்றைத் தருக.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)
### பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.
(அல்லது)
ஆ) எதற்காக எழுதுகிறேன் என ஜெயகாந்தன் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணைனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? (அல்லது)
ஆ) மங்கையராய் பிறப்பதற்கே... என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

45. அ) முன்னுரை – கல்பனா சாவ்லாவின் பிறப்பு – இளமைக் கல்வி – கல்லூரிக் கல்வி – விண்வெளிப்பயணம் – முடிவுரை – இக்குறிப்பைக் கொண்டு கட்டுரை எழுதுக. (அல்லது)
ஆ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் பள்ளி நூலகத்தில் படித்த கதை / கட்டுரை/ சிறுகதை/ கவிதை இவற்றில் ஏதேனும் ஒரு நூலுக்கான மதிப்புரையை எழுதுக.
குறிப்பு: நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூல்கட்டமைப்பு நூல் ஆசிரியர் – நூலைக் குறித்த பொதுவானக் கருத்து.

------------

Reg.No. | | | | | | |

# முதல் திருப்புதல் தேர்வு – 2020

காலம்:3.00மணி வகுப்பு – 10 மதிப்பெண்கள்: 100

## தமிழ்

## (செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களுக்கும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: 1) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2) வினா எண் 21 மற்றும் 34க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பகுதி – I (மதிப்பெண்கள் 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **15 x 1 = 15**

1. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

2. கடல் தன் நீரலையைத் தடுத்து நிறுத்தி ......... காக்கிறது.
அ) கப்பலைக் ஆ) சங்கினைக் இ) சிப்பியைக் ஈ) முத்துக்களைக்

3. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகை செய்வதாகக் கூறியவர்
அ) கம்பர் ஆ) வள்ளுவர் இ) நற்றிணை ஈ) இளம்பெருவழுதி

4. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொர்ருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
தலைப்பு: செயற்கை நுண்ணறிவு
குறிப்புகள்: கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது, திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.
அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன,
ஈ) குறிப்புகளுக்குத் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

5. வாய்மையே மலைநீராகி என்னும் தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

6. ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
அ) யாருக்காக அழுதான் ஆ) சிலநேரங்களில் சில மனிதர்கள்
இ) உன்னைப்போல் ஒருவன் ஈ) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

7. 'போலச் செய்தல்' பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் ஒன்று
அ) காவடியாட்டம் ஆ) பொய்க்கால் குதிரையாட்டம் இ) தப்பாட்டம் ஈ) தெருக்கூத்து

8. பின்வருவனவற்றுள் தொடர்மொழியை எழுதுக.
அ) கண் ஆ) வேங்கை இ) ஆடு மேய்ந்தது ஈ) அசையாமை

9. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல், நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

10. உதவி செய்தலை ஈழத்து பூதன் தேவனார் குறிப்பிடும் முறை
அ) பசிப்பிணி மருத்துவன் ஆ) உதவியாண்மை இ) பிறர்துன்பம் தீர்ப்பது
ஈ) சான்றோர் செல்வம்

11. ஆநிரைகளைப் மீட்டல்:
அ) கரந்தை ஆ) வெட்சி இ) தும்பை ஈ) வாகை

பாடலை படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிமிக்கும் தெருளை
அருந்துவதும் ஆலிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) திருப்பாவை ஆ) நீதிவெண்பா இ) திருவிளையாடற்புராணம் ஈ) பூத்தொடுத்தல்
13. மருளை அகற்றி என்பதன் பொருள்
அ) அறிவை அகற்றி ஆ) அருளை அகற்றி இ) உயிர்அகற்றி ஈ) மயக்கம் அகற்றி
14. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள்
அ) அருந்துவதும், பொருந்துவதும் ஆ) ஆவிக்கு, அருந்துணை
இ) கல்வி, போற்று ஈ) மருளை, மதிக்கும்
15. இப்பாடலில் போற்றிக் கற்க வேண்டியதாய் ஆசிரியர் கூறுவது
அ) அருள் ஆ) மருள் இ) கல்வி ஈ) இன்பம்

## பகுதி – II (மதிப்பெண்கள் 18)

### பகுதி – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய அளவில் விடையளிக்க.**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க. 4 x 2 = 8**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) பாவாணர் உலகத்தமிழ் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
ஆ) செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5–6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும் பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.
17. வசன கவிதை – குறிப்பு வரைக.
18. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
19. கடினப்பாதையில் எவ்வோசை எழும் என மலைபடுகடாம் கூறுவதை எழுதுக.
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. விடல் – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10**

22. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக.
அ) வருந்தாமரை ஆ) பலகையொலி
23. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.
அ) வரப்போகிறேன் ஆ) முன்னுக்குப் பின்
24. பின்வரும் தொடர்களில் எழுவாயைச் செழுமை செய்க.
அ) கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும் ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
25. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண்
ஆ) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா தொடரைப் படித்து விடையைக் கண்டறிக. (கற்றல், பூவில்)
அ) நூலின் பயன் படித்தல் எனில் கற்றலின் பயன் ........
ஆ) மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ..........
26. ஆற்றுநீர் பொருள் கோளைச் சான்றுடன் எழுதுக.
27. தொடரை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
கூத்துக் கலைஞர் பாடத்தொடங்கினர். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
(கலவைச் சொற்றொடராக மாற்றுக)
28. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.



## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பகுதி – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை எழுதுக.
30. தமிழ்நாட்டில் நிகழ்த்தப்படும் நிகழ்கலைகள் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது என்பதை சான்றுடன் நிறுவுக.
31. பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நான் உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றேன். தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன். விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின் உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து புவியின் உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.

வினாக்கள்
அ) உணவு உற்பத்திக்கு காற்று எவ்வாறு உதவுகிறது?
ஆ) உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க செய்யும் பணி யாது?
இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க.**

32. ‘சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது’ இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
34. அடிபிறழாமல் எழுதுக.
விருந்தினனாக.... எனத் தொடங்கும் காசிக் காண்டம் பாடல். (அல்லது)
நவமணி வடக்க .... எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

35. வழுவமைதி என்றால் என்ன? அதன் வகைகளில் ஏதேனும் மூன்றினைச் சான்றுடன் விளக்குக.
36. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. தன்மையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (அல்லது)
ஆ) கருணையனின் தாய்மறைவுக்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
39. அ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) மாநில அளவில் நடைபெற்ற ‘மரம் இயற்கையின் வரம்’ எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றத் தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

# முதல் திருப்புதல் தேர்வு - 2020 (விடைக்குறிப்பு)

## வகுப்பு - 10

## பாடம் - தமிழ்

**(செய்யுள், உரைநடை, இலக்கணம் , கட்டுரை மொழிப் பயிற்சி)**

## பகுதி-1 (மதிப்பெண்கள் 15)

**1 . பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

**அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்**

**2.** கடல் நீர் அலையை தடுத்து நிறுத்தி______காக்கிறது.

**ஆ) சங்கினைக்**

**3.** கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகை செய்வதாக கூறியவர்?

**அ) கம்பர்**

**4.** தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்க.

தலைப்பு: செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள்: கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையை திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்கு சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

**அ) தலைப்புக்கு பொருத்தமான குறிப்பு இடம்பெற்றுள்ளது.**

**5.** வாய்மையே மலைநீராகி என்னும் தொடரில் வெளிப்படும் அணி

இ) **உருவகம்**

**6.** ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல்

**ஆ) சில நேரங்களில் சில மனிதர்கள்.**

**7.** 'போலச்செய்தல்' பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் ஒன்று

**ஆ) பொய்க்கால் குதிரையாட்டம்.**

**8.** பின்வருவனவற்றுள் தொடர் மொழியை எழுதுக

**இ) ஆடு மேய்ந்தது**

**9.** குளிர்காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள்

**இ) குறிஞ்சி, மருதம் ,நெய்தல் நிலங்கள்**

10. உதவி செய்தலை ஈழத்துப் பூதன்தேவனார் குறிப்பிடும் முறை

**ஆ) உதவியாண்மை**

**11.** ஆநிரைகளைப் மீட்டல்

**அ) கரந்தை**

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15)விடை தருக

**அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**

**மருளை அகற்றி மதமிக்கும் தெருளை**

**அருந்துவதும்  ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்**

**பொருந்துவதும் கல்வி என்றே போற்று.**

**12**. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

**ஆ) நீதி வெண்பா**

**13.** மருளை அகற்றி என்பதன் பொருள்

**ஈ) மயக்கம் அகற்றி**

**14.** பாடலில் அமைந்துள்ள எதுகை சொற்கள்

**அ) அருந்துவதும் பொருந்துவதும்**

**15**. இப்பாடலில் போற்றி கற்க வேண்டிய தாய் ஆசிரியர் கூறுவது

**இ) கல்வி**

## பகுதி - II (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

**16.** விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) பாவாணர் உலகத்தமிழ் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

**உலகத்தமிழ் கழகத்தை நிறுவியவர் யார்?**

ஆ)செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம்  மாதங்களில் மென்மையாக அசையும் பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.

**செங்கீரைப் பருவம் என்பது யாது?**

**17.** வசன கவிதை- குறிப்பு வரைக .

**உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது . ஆங்கிலத்தில் prose poetry(Free verse) என்று அழைக்கப்படும்.**

**18.** தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக

**இலை:** புளி வேம்பு முதலியவற்றின் இலை

**தாள்:** நெல், புல் முதலியவற்றின் இலை

**தோகை:** சோளம் கரும்பு முதலியவற்றை இலை.

**ஓலை:** தென்னை, பனை முதலியவற்றின் இலை

**சண்டு:** காய்ந்த தாளும் தோகையும்

**சருகு:** காய்ந்த இலை.

19. கடினப் பாதையில் எவ்வோசை எழும் என மலைபடுகடாம் கூறுவதை  எழுதுக.

**அசையும் மூங்கில்கள் எழுப்பும் ஓசை .**

20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

*** நூல் வாங்குவதற்குப் போதிய பணம் இல்லாத குறையைப் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று தனக்கு விருப்பமான புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கினார்.**

*** உணவுக்காக வைத்திருந்த பணத்தில் புத்தகங்கள் வாங்கி விட்டு பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.**

***குறைந்த விலைக்கு நல்ல நூல் கிடைத்ததால் பேரானந்தம் அடைவார்.**

21. விடல் - என முடியும் குறள் எழுதுக .

**பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**

**நல்லார் தொடர்கை விடல்.**

## பிரிவு - 2

22. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக.

அ) வரும் தாமரை  ஆ)பலகையொலி

**அ) வருந்தாமரை:**

| | |
|---|---|
| வரும் தாமரை | வரும் தாமரை மலர் |
| வரும் +தா+மரை | வருகின்றது தாவுகின்ற மான் |
| வருந்தா மரை | கவலைப்படாத மான் |
| வருந்த அமரை | (அமர்-போர்) கவலைப்பட போரை. |

**ஆ) பலகையொலி:**

| | |
|---|---|
| பல+கையொலி | பல கைகளின் ஒலி |
| பலகை+ஒலி | மரப்பலகையின் ஒலி |

23. பின்வரும் தொடர்களை கொண்டு பொருத்தமான தொடரமைக்க

அ) வரப்போகிறேன்      ஆ)முன்னுக்குப்பின்

**அ) வரப்போகிறேன் : இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன்**

**ஆ) முன்னுக்குப்பின் : காவலர் திருடனைப் பிடித்து விசாரித்தும் அவன் முன்னுக்குப்பின் முரணான பதில்களையே சொன்னான்.**

**24**. பின் வரும் தொடர்களில் எழுவாயயைச் செழுமை செய்க.

அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களை கற்றுத் தருகிறது.

**அ) கசடறக் கற்ற கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.**

**ஆ) வாழ்க்கை பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.**

**25.** எண்ணுப்பெயர் களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக :

அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண்

ஆ) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி.

**அ) ரு ஆ) க000**

**26.** ஆற்றுநீர் பொருள்கோளச் சான்றுடன் எழுதுக.

**"சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்**

**மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்**

**செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்**

**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே" ___சீவக சிந்தாமணி.**

**நெற்பயிர் கருவுற்ற பச்சைப் பாம்பின் வடிவம் போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்ற மக்கள் பணிவின்றித் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்ந்தன.**

**' நெல்' என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி , இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் 'காய்த்தவே' என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.**

**பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்று நீரின் போக்கை போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆகும்.**

**27.** தொடரை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக

கூத்துக் கலைஞர் பாடத்தொடங்கினர். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவை சொற்றொடராக மாற்றுக)

**கூத்துக் கலைஞர் பாட தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அனைவரும் அமைதியாயினர்.**

**28.** தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | |
|---|---|
| தனி | பகுதி |
| த்(ந்) | த் - சந்தி, ந்-விகாரம் |
| அ | சாரியை |
| து | படர்க்கை வினைமுற்று விகுதி. |

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

**29.** இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை எழுதுக.

**இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.காரணம் கணினி வழியாகவும் அறிவியல் தொழில்நுட்பத்தில் வழியாகவும் மனிதன் தன்னை மேம்படுத்திக் கொள்ள ஏதுவான சூழல் உருவாகியுள்ளது.**

**அதேநேரத்தில் அத்தகைய புதிய கண்டுபிடிப்புகளால் மனிதன் சில சமயங்களில் சோம்பேறிகளாகவும் அத்தகைய கண்டுபிடிப்புகளை மனித அழிவுக்குக் காரணங்களாகும் போது அது மனித மேம்பாட்டை குலைக்கின்றன.**

**ஆக்கம் தரும் மனித வாழ்வுக்கு அறிவியல் கண்டுபிடிப்புகள் என்றும் துணை நிற்க வேண்டும்.பரிணாம வளர்ச்சியின் படி முடியாக திகழும் மனிதன் தன்னுடைய அறிவியல் வளர்ச்சியில் பரிணாம வளர்ச்சியை கண்டு கொண்டுதான் இருக்கிறான். இத்தகைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்திக் கொண்டே இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.**

**30.** தமிழ்நாட்டில் நிகழ்த்தப்படும் நிகழ் கலைகள் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் வழங்கப் படுகிறது என்பதை சான்றுடன் நிறுவுக.

**இலங்கை , மலேசியா உட்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.**

**பொய்க்கால் குதிரை ஆட்டம். இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாக கூறப்படுகிறது.**

**பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கு பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாதஸ்வரமும் இசைக்கப்படுகின்றன.இது ராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றது.**

**31. பின்வரும் பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**அ)** உணவு உற்பத்திக்கு காற்று எவ்வாறு உதவுகிறது?

**விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூங்குவதால் உணவு உற்பத்திக்கு காற்று உதவுகிறது.**

**ஆ)** உயிர்ச் சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க செய்யும் பணி யாது?

**பூவின், தேனின், கனியின், தாவரத்தின் உயிரினத்தின் மனத்தை எண்ணில் சுமந்து புவியின் உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறேன்.**

**இ)** இவ்வுரை பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக

**ஒலி ஒளி பயன்பாடு.**

**32.** 'சித்தாளின் மனச் சுமைகள்

செங்கற்கள் அறியாது ' __ இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

### இடம் :

**கவிஞர் நாகூர் ரூமி எழுதிய சித்தாளு தலைப்பிலுள்ள கவிதை பேழையில் மேற்காட்டிய செய்யுளடிகள் இடம் பெற்றுள்ளன.**

### பொருள் :

**சித்தாள் தன் தலையில் அலுக்காமல் சுமக்கும் கற்கள் அடுத்தவர் கனவுக்காக அடுக்கு மாடி கட்டப் பயன்படுகிறது. அடுத்த வேளை உணவுக்காக சுமக்கிறாள். சித்தாளின் மனச் சுமைகளைச் செங்கற்கள் அறியாது ; செத்துப் போனாலும் சிறிதளவே சலனம் ஏற்படுத்தும் ; ஏனெனில் செங்கற்கள் உயிரற்றவை.**

**33.** தமிழன்னையை வாழ்த்து வதற்கான காரணங்களாகக் பாவலரேறு சுட்டுவன யாவை?

*** தமிழன்னை அன்னை மொழியானவள்.**

*** அழகாய் அமைந்த செழுந்தமிழானவள்.**

***பழமைக்குப் பழமையாய் தோன்றிய நறுங்கனி.**

*** கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலக பேரரசானவள்.**

*** பாண்டிய மன்னனின் மகள்**

*** திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள்.**

***பதினெண் மேற்கணக்கும் பதினெண் கீழ்க்கணக்கும் நிலைத்த சிலப்பதிகாரமும் அழகான மணிமேகலையும் கொண்டவள் . அதனால் பொங்கி எழும் நினைவுகளால் பாவலரேறு தமிழன்னையை வாழ்த்துகிறார்.**

**34.** அடிபிறழாமல் எழுதுக.

விருந்தினனாக..... எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

**(அல்லது)**

நவமணி வடக்க...... எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்.

**விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்**

**வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்**

**திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்**

**எழுதுதல் முன் மகிழ்வான செப்பல்**

**பொருந்து மற்றுஅவன் தன் அருகுற இருத்தல்**

**போமெனில் பின் செல்வதாதல்**

**பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்**

**ஒழுக்கமும் வழிபடும் பண்பே.**

**(அல்லது)**

**நவமணி வடக்க யில்போல்**

நல்லறப் படலைப் பூட்டும்

நவமணி மார்பன் சொன்ன

தண்ணிசைக்கு இசைகள் பாடத்

துவமணி மரங்கள் தோறும்

துணர்அணிச் சுனைகள் தோறும்

உவமணி காணம்கொல் என்று

ஒலித்து அழுவ போன்றே.

## பிரிவு - 3

**35.** வழுவமைதி என்றால் என்ன? அதன் வகைகளில் ஏதேனும் மூன்றினைச் சான்றுடன் விளக்குக.

### வழுவமைதி :

இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

### 1. திணை வழுவமைதி :

'என் அம்மை வந்தாள்'என்று மாட்டைப் பார்த்து கூறுவது திணை வழுவமைதி ஆகும். இங்கு உப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

### 2. பால் வழுவமைதி :

"வாடா இராசா, வாடா கண்ணா"என்று தன் மகளை பார்த்து தாய் அழைப்பது பால் வழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக, பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

### 3. இட வழுவமைதி :

மாறன் என்பான் தன்னைப்பற்றி பிறரிடம் கூறும்போது "இந்த மாறன் ஒருநாளும் பொய் கூற மாட்டான்"என, தன்மையினை படர்க்கை இடத்தில் கூறுவது இட வழுவமைதி ஆகும்.

**36.** குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்

சுற்றமாச் சுற்றும் உலகு. ----- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

| | அசை | வாய்பாடு |
|---|---|---|
| குற்/றம் | நேர்நேர் | தேமா |
| இல/னாய்க் | நிரைநேர் | புளிமா |
| குடி/செய்/து | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| வாழ்/வா/னைச் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| சுற்/றமாச் | நேர் நிரை | கூவிளம் |
| சுற்/றும் | நேர்நேர் | தேமா |

| | | |
|---|---|---|
| உல/கு | நிரை நேர் | புளிமா |

**37.** தன்மையணி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர். இவ்வணி நான்கு வகைப்படும். பொருள் தன்மை அணி , குணத் தன்மை அணி , சாதி தன்மையணி , தொழிற் தன்மையணி என்பதாகும்.

(எ.கா)

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**

**கையில் தனிச் சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்**

**கண்ட ளவே தோற்றான், அக் காரிகை தன் சொற் செவியில்**

**உண்ட ளவே தோற்றான் உயிர்.**

**சிலம்பு - வழக்குறை காதை வெண்பா**

### பாடலின் பொருள் :

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வைகை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான் .

### அணிப் பொருத்தம்:

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சி அணி எனப்படும்.

## பகுதி -IV (மதிப்பெண்கள்-25)

**38.** இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

### இறைவனிடம் கூறியது :

'திரு ஆலவாயில் உறையும் இறைவனே! அழகிய வேப்ப மாலை அணிந்த குலசேகரபாண்டியன், பொருட் செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக் கேட்டு அவன்முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவன் சிறிதேனும் மதிக்காமல் புலமையை அவமதித்தாலன்' என்றார்.

### இறைவனின் திருச் செவியில் சென்று தைத்த சொல் :

இடைக்காடனார் இறைவனிடம் பாண்டியன் என்னை நிகழவில்லை. சொல்லின் வடிவாக உன் இடப்புறம் உள்ள பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான் என்று சினத்துடன் கூறிய சொல் வேற்படை போல் இறைவனின் திருச் செவியில் சென்று தைத்தது.

### மனமகிழ்ச்சி உண்டாக்க :

இறைவன் புலவர் இடைக்காடனாருக்கும் அவர் நண்பர் ஆகிய கபிலருக்கு மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார். இறைவன் ஞானமாகிய தம்முடைய லிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலை விட்டு வெளியேறி நேர் வடக்கே வைகை ஆற்றின் தென் பக்கம் ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்கு சென்று இருந்தார்.

## மன்னன் இறைவனை வேண்டல் :

**உடனே மன்னன் இறைவனிடம் என்னால் இடையூறு ஏற்பட்டதா எந்தாய்? மறையவர் நல்லொழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறம் - துறவரம் - தத்தம் நெறியில் இருந்து தவறியனவோ? யான் அறியேன் என்று வேண்டினான்.**

## மன்னன் செய்த குற்றம் :

**'இறைவன் மன்னனிடம், கடம்பவனம் விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இழந்தது மட்டும் தான் உம் குற்றம். இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்'என்றார். வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன் பரம்பொருளாம் இறைவனிடம் தன் குற்றத்தை பொறுக்க வேண்டி போற்றினான்.**

## இடைக்காடனாருக்குச் செய்த சிறப்பு :

**மன்னனது மாளிகையில் பொன் இருக்கையில் இடைக்காடருக்கு ஒப்பனை செய்து அமரவைத்து மன்னன் சிறப்பு செய்தான். புண்ணிய வடிவான புலவர்களிடமும் குற்றம் பொறுத்துக்கொள்ள வேண்டினான்.**

**இதுவே இடைக்காடன் குரலுக்கு இறைவன் செவிசாய்த்த நிகழ்வாகும்.**

**(அல்லது)**

**ஆ)** கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உண்மைகளாகும் உருவாக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

## மலர்ப்படுக்கை :

**கருணை என் தன் மலர்போன்ற கையை குவித்து, 'பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக!' என்று கூறி குழியினுள் அழகிய மலர் படுக்கையை பரப்பினான்.**

## இளம் பயிர் வாடியது போல்:

'என் தாய் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழை நீராக உட்கொண்டு அத்தாயின் மார்பில் ஒரு மணி மாலையென அசைந்து அழகுற வாழ்ந்தேன். தூயமணி போன்ற தூவும் மழை துளி இல்லாமல் இளம் பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளை காணும் முன்னே வாடி காய்ந்து விட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே என்றான் கருணையன்.

## துணையைப் பிரிந்த பறவைபோல :-

என் மனம் பரந்து நின்ற மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலரை போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அன்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன்.

## பல்வேறு இசைகளை இயக்கியது போன்று :-

நவ மணிகள் பதித்த மணி மாலைகளை விரித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பினாகிய கருணையின். இவ்வாறு புலம்பி கூறினான். அதுகேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று. தேன் மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம் வீசும் மலர்களும் மலர்ந்த குளங்கள் தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

**38.அ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.**

**அனுப்புதல் :**

**ஊர் பொதுமக்கள்,**

**வலையூர்,**

**திருச்சி மாவட்டம் — 621005.**

**பெறுதல் :**

**மின்வாரிய அலுவலர்,**

**தமிழ்நாடு மின்வாரிய அலுவலகம்,**

**திருச்சி மாவட்டம் - 621008**

**ஐயா,**

**பொருள் : மின்விளக்கு வேண்டி கோருதல் - சார்பு.**

**எங்கள் கிராமத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். பேருந்து வழித்தடத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் எங்கள் ஊர் உள்ளது.நாள்தோறும் மக்கள் வெளியூர்களுக்குச் சென்று வரும்போது இரவு நேரங்களில் வழியில் போதிய மின்விளக்குகள் இல்லை மக்கள் மிகுந்த இடர்பாடுகளை அடைகின்றனர். எனவே எங்களுக்கு போதிய மின்விளக்குகளை அமைத்துத் தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**இப்படிக்கு**

**தங்கள் உண்மையுள்ள**

**ஊர் பொதுமக்கள்,**

**வலையூர்,**

**திருச்சி மாவட்டம், --621005**

**உறைமேல் முகவரி :**

**மின்வாரிய அலுவலர்,**

**தமிழ்நாடு மின்வாரியஅலுவலகம்,**

**திருச்சி மாவட்டம் – 621008.**

**(அல்லது)**

**ஆ)** மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றத் தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

__ / __ / 2020.

அன்புள்ள நண்பா,

நலம்.உன் நலமறிய ஆவல். மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்'என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறாய் என்ற செய்தி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

நீ இயற்கையின் மீது எவ்வளவு ஆர்வமுடன் இருந்துள்ளாய் என்பது எனக்குத் தெரியும். மரங்களை வளர்ப்பதிலும் அவற்றைப் பேணி பாதுகாப்பதிலும் உனக்குள்ள அக்கறை கண்டு உன்னை எல்லோரும் பாராட்டியுள்ளனர்.

உன் வீட்டில் நீ நட்டு வளர்த்து நிழல் தந்து கொண்டிருக்கின்ற மரங்களே இதற்குச் சாட்சி. வெறும் எழுத்தளவில் கிடைத்ததல்ல இப்பரிசு. உன் சாதனைக்காக கிடைத்த பரிசு. இன்னும் உன் சேவையை விரிவாக்கு.

உன் தெரு முழுவதும் மரங்களை நட்டுச் சோலையாக்கு. உன்னோடு இரண்டு , மூன்று நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் சேவை தொடரட்டும் ! இன்னும் பல பரிசுகள் உன்னை வந்து சேரட்டும்.

இப்படிக்கு

உன் அன்புத் தோழன்,

மு.வளவன்.



## உறைமேல் முகவரி:

க. செம்பியன்

10, பாரதி நகர் ,உறையூர்,

திருச்சி - 8 .


40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக .

விருந்தோம்பலின் மாட்சி தான் என்னை !

உயிரினத்திற்கு உணவு தருகிறாய்!

உவந்து நீ மதிப்புக் காண்கிறாய் !

உவகையுடன் உன்னை தேடி வரும்



10105 மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : [redacted] தேதி : 3.6.2020 வகுப்பும் பிரிவும்: XI "அ"

1. மாணவ / மாணவியரின் பெயர் : மா. சிவராமன்
2. பிறந்த தேததி : 15.5.2004
3. தேசிய இனம் : இந்து
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : மாலன் - கற்பகம்
5. வீட்டு முகவரி : 36, தெற்கு தெரு, காந்திநகர், மதுரை
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : X
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 465
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அ. மே. நி. பள்ளி, மதுரை
10. மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு அரசு பொது தேர்வு | 655678 2018 – 2019 | தமிழ் | 94 |
| | | ஆங்கிலம் | 85 |
| | | கணிதம் | 94 |
| | | அறிவியல் | 96 |
| | | சமூக அறிவியல் | 96 |
| | | மொத்தம் | 465 |

11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : தமிழ்

மா. சிவராமன்
மாணவ / மாணவியர் கையெழுத்து

**உயிரினத்திற்கு உணவைக் கொடு**

**உன்னத பாதுகாப்பில் என்றும் வாழ்ந்திடு.**

**41.** படிவம் நிரப்புதல்.

**42.அ)** பள்ளி தூய்மையாக வைத்திருக்க உதவும் ஐந்து திட்டங்களை எழுதுக

*** குப்பைகளை நாள்தோறும் சுத்தம் செய்வேன்.**

***பிறர் குப்பைகளை போட்டாலும் அறிவுரை கூறுவேன்.**

*** குப்பைகளை குப்பைத் தொட்டியில் மட்டுமே போட வேண்டும்.**

***தின்பண்டங்கள் வாங்கும் பொழுதும் அல்லது தற்செயலாக காகிதங்கள் கிழிக்க நேர்ந்தாலோ எனது பையிலேயே வைத்து குப்பைத் தொட்டியில் சென்று போடுவேன்.**

*** மக்கும் குப்பை மக்காத குப்பை என பிரித்து குப்பை தொட்டிகளில் குப்பைகளை போடுவேன்.**

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க:**

1) Education is what remains after one has forgotten what one has learnd in school - Albert Einstein.

**ஒருவர் பள்ளியில் கற்றுக் கொண்டதை மறந்து விட்ட பிறகு எஞ்சியிருப்பது கல்வி. — ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.**

**2. Tomorrow is often the busiest day of week. -- Spanish proverb.**

**நாளை பெரும்பாலும் வாரத்தின் பரபரப்பான நாள். – ஸ்பானிஷ் பழமொழி.**

**பகுதி - V (மதிப்பெண்கள் 24)**

**43. அ)** ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்கு புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி வெளிப்படுத்துவதாக இருந்தது அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறி இருப்பதை விளக்குக.

**முன்னுரை :**

**ஆற்றுப்படுத்துதல் என்பதற்கு 'நல்வழி' காட்டுதல் என்று பொருள். ஒருவரை நெறிப்படுத்தி வழிநடத்துதல் ஆற்றுப்படை ஆகும். அன்றும் இன்றும் வழிகாட்டுதல் வேறுபடலாம். ஆனாலும் ஒருவருக்கு நல்வழியைக் காட்டி நெறிப்படுத்துதல் என்றும் காணப்படுகிறது.**

### ஆற்றுப்படை இலக்கணம் :

**கூத்தனோ, பாணனோ, தான் பெற்ற செல்வத்தை கூறி எதிர்வந்த கூத்தன். அல்லது பாணனிடம் அவ்வள்ளலை நாடினால் நீயும் என்னைப் போன்று செல்வம் பெறலாம் என்று வழிப்படுத்வது ஆற்றுப்படையின் இலக்கணமாகும்.**

**"பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"என்று தொல்காப்பியம் கூறுகின்றது.**

### வழிகாட்டுதல் :

**இன்று ஆற்றுப்படுத்துதல் என்ற சொல் வேண்டுமானால் மாறியிருக்கலாம். ஆனால் வழிகாட்டுதல், நெறிப்படுத்துதல், வழிநடத்துதல் என்ற சொற்கள் தரும் பொருளை ஆற்றுப்படுத்துதல் என்றே கொள்ளலாம்.**

**சமுதாயத்தில் : வறுமையில் வாடும் வரை இன்னாரிடம் சென்று, உன் நிலையை கூறினால் உன்னை அவர் வாழ வைப்பார்; பொருளைத் தந்து ஆதரவு தருவார். நல்ல வார்த்தை கூறி வழிகாட்டுவார் என்ற நிலை காணப்படுகிறது.**

### கல்விக்கூடங்களில் ;

**நன்றாக படிக்கக்கூடிய மாணவர்களிடத்திலும், சிறப்பாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமும் நல்வழியைக் காட்டி நெறிப்படுத்துதல் இன்றும் நடைபெற்று வருகிறது. இதனால் மாணவர்கள் தன் இளமைக் காலத்தில் நல்வழியில் நடந்து தன் வாழ்க்கையை செழுமைப் படுத்திக் கொள்வர்.**

### முடிவுரை :

**வழிகாட்டுதல் நெறிப்படுத்துதல் ஒவ்வொருவர் வாழ்விலும் தேவையான ஒன்றாகும். வாழ்க்கையை வளமாக்க விரும்புவோர் நல்வழிப்படுத்தும் நெறியாளர்களின் சொல் கேட்டு வாழ்ந்து இன்பம் அடையலாம்.**

**(அல்லது)**

ஆ) எதற்காக எழுதுகிறேன் என ஜெயகாந்தன் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

*சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்தில் காட்டவும், மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைக்கவும்.

* தன்னை அறிந்து கொள்ளவும் பிறருக்கு தன்னை உணர்த்தவும்.

*நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல் சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்.

**44.அ)பு**யலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வர்ணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

## முன்னுரை:

மலேசியா இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பே. புயலிலே ஒரு தோணி என்னும் புதினம்.

## கடலில் ஏற்பட்ட மாற்றம்:

கொளுத்திக்கொண்டிருந்த வெயில் இமைப் பொழுதில் மறைந்தது. எதிர்த்திசையில் வானையும் கடலையும் மாறிமாறி பார்த்தவாறு கற்பித்தானுடன் பரபரப்பாக பேசிக் கொண்டிருந்த மாலுமிகள் திடுமென பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று கயிறுகளை இருக்கிறார்கள். அங்கு அச்சம் மட்டுமே நிகழ்கிறது.

## காற்றும் புயலும்:

கிடுகிடுக்கும் இடிமுழக்கம் வானில் மின்னல் கீற்றுகள். வானில் மழைநீர் கொட்டித் தீர்த்தது. தொங்கான் அப்படியும் இப்படியும் தாவிக்குதித்து தத்தளிக்கிறது.

## கூத்தாடிய கடல் அலை:

பாண்டியன் எழுந்தான். எங்கெங்கோ இடுக்குகளில் முடங்கிக் கிடந்த உருவங்கள் தலைதூக்கின. மலைத் தொடர் போல் அலைகள் மோதின. கடல் வெறிக் கூத்தாடுகிறது.

## கடலில் கூத்து:

பாய்மரக்கப்பல் ஒடிந்து கிடக்கிறது. மாலுமிகள் நீரை இறைத்து ஊற்றுகின்றனர். ஓட்டைகள் அடைகிறார்கள். கடற் கூத்து எவ்வளவு நேரம் நீடித்தது என்று யாராலும் கணக்கிட இயலவில்லை.

## கரை தெரிந்தது :

பாண்டியன் கப்பித்தானிடம் நிலவரத்தை கேட்டுத் தெரிந்தான். "இனிமேல் பயமில்லை இரண்டு நாள்களில் கரையைப் பார்க்கலாம்" என்றான். தொங்கான் மிதந்து சென்றது. கடலில் இழுவைக்கு இணங்கி உப்பங்காற்று உடலை வருடியது.

## முடிவுரை :

கடற் கூத்து ஐந்தாம் நாள் மாலையில் வானோடு வானாய் கடலோடு கடலாய் மரப் பச்சை தெரிவது போல் இருந்தது. அடுத்தநாள் முற்பகலில் பினாங்கு துறைமுகத்தை அடைந்தது.

**(அல்லது)**

மங்கையராய் பிறப்பதற்கே..... என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**முன்னுரை:** பழந்தமிழகத்தில் பெண்கள் நன்மதிப்பு பெற்றிருந்தனர். ஆண்களைப் போலவே பெண்களும் தலைமை பண்பும் சமூகப் பண்பும் கொண்டவர்களாக விளங்கினர்.

**எம.எஸ். சுப்புலட்சுமி :**

சிறு வயது முதல் இசையை முறைப்படி பயின்றவர். திரைப்படங்களில் நடித்தவர். மீரா திரைப்படம் திருப்புமுனையாக அமைந்தது . 1966-ல் ஐநா அவையில் பாராட்டினர். 1974 இல் நோபல் பரிசுக்கு இணையான மகசேசே விருது வழங்கப்பட்டது. பிற மொழிகளிலும் பாடியுள்ளார்.

**பாலசரஸ்வதி:**

காஞ்சிபுரத்தில் தனது முதல் பரதநாட்டிய அரங்கேற்றம் முடித்த பின்னர் சென்னையில் பண்டிட் ரவிசங்கரின் பாராட்டையும் பெற்றவர். ஜனகனமன பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு ஆடியவர். பரதநாட்டியத்தை முறையாக அடுக்கினால் ஆன்மிக பட்டறிவைப் பெறலாம் என்று உலகிற்கு உணர்த்தியவர்.

**ராஜம் கிருஷ்ணன்:**

பெண்களின் பார்வையில் குடும்பம் மட்டுமே என்ற நிலையை உடைத்து சமூக சிக்கல்களை கதையாக எழுதியவர் ராஜம் கிருஷ்ணன் ஆவார். பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, கரிப்பு மணிகள், குறிஞ்சித் தேன், அலைவாய்க் கரையில், சேற்றில் மனிதர்கள், வேருக்கு நீர், மண்ணகத்து துளிகள் என்று பல்வேறு தலைப்புகளில் எழுதி பலரது பாராட்டையும் பெற்றவர்.

**கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்:**

கல்லூரி காலத்தில் காந்தியச் சிந்தனைகளால் கவரப்பட்டவர்.ஒத்துழையாமை இயக்கம் , சட்ட மறுப்பு இயக்கம் , வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கேற்றவர். 'உழவருக்கே நில உரிமை இயக்கம்' தொடங்கியவர்.

**சின்னப்பிள்ளை :**

களஞ்சியம் என்ற மகளிர் சுய உதவி குழுவைத் தொடங்கி பலரது வாழ்வில் விளக்கேற்றியவர். பெண் ஆற்றல் விருது, ஔவை விருது, பொதிகை விருது, தாமரை திரு விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர்.

**முடிவுரை :**

பெண்கள் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் சமூக சிந்தனையோடு வாழ்ந்த பெண்களின் வரலாறுகளை அறிந்து இந்த சமுதாயத்திற்கு நம்மால் முடிந்த செயல்களை செய்திட வேண்டும்.

**45.அ)** முன்னுரை கல்பனா சாவ்லாவின் பிறப்பு- இளமை கல்வி - கல்லூரி கல்வி - விண்வெளிப்பயணம் - முடிவுரை இக்குறிப்பைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**முன்னுரை:**

ஓர் லட்சியத்தை எடுத்துக் கொள். அதை நோக்கி நாள்தோறும் முன்னேறு. இறுதியாக ஒரு இலக்கை உறுதியாக அடையமுடியும். இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கல்பனா சாவ்லா.

**பிறப்பு :**

1961 ஆம் ஆண்டு ஜனவரி ஏழாம் நாள் பனார்சிதாஸ் சாவ்லா, சன்யோகிதா தம்பதியருக்கு கடைக் குட்டியாக பிறந்தவர் கல்பனா.

**இளமை கல்வி:**

ஆரம்பக் கல்வியை கர்னலில் உள்ள அரசு பள்ளியில் தொடங்கினார்.

## கல்லூரி கல்வி ;

சண்டிகரில் இருந்த பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் ஏரோநாட்டிகல் எஞ்சினியரிங் படிப்பதற்காக சேர்ந்தார். அந்த வகுப்பில் இருந்த ஒரே பெண் அவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. முதுகலை படிப்பிற்காக அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் மாநிலத்தில் இருந்த அர்லிங்டன் பல்கலைகழகத்தில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளில் படித்துத் தேறினார். கொலராடோ பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். அதன்பின் அமெரிக்காவில் வணிக முறையிலான விமானத்தை இயக்குவதற்கான அனுமதி அவருக்கு வழங்கப்பட்டது.

## விண்வெளிப்பயணம்:

நாசாவின் ஆம்ஸ் ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சியாளராக பணியில் சேர்ந்தார்.பின்னர் ஏவுகணைகள் விமானங்கள் ஆகியவற்றை சிக்கலின்றி பறக்க வைப்பது போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்.ஒன்றரை ஆண்டுகள் கடுமையான பயிற்சிக்கு பின் வானில் பறக்க தயாராகிவிட்டார் கல்பனா. 1997இல் மேற்கொண்ட பயணத்தில் சுமார் 372 மணி நேரம் விண்வெளியிலிருந்து சாதனை புரிந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினார்.

## முடிவுரை:

2003 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் நாள் விண்வெளிக்கு கருப்பு நாள். கல்பனா சென்ற விண்கலம் யாரும் எதிர்பாராத வகையில் விழுந்து சிதறியது. அவருக்கு விண்வெளி மீது அளவில்லாத காதல் இருந்தது. பறப்பதை மட்டுமே அவர் சிந்தித்தார் செயல்படுத்தினார் வெற்றியும் கண்டார். அதைப்போலவே ஒவ்வொருவரும் சிந்தியுங்கள் செயல்படுங்கள் வெற்றி காணுங்கள்.

**(அல்லது)**

**ஆ)** பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் பள்ளி நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை/ சிறுகதை/ கவிதை இவற்றில் ஏதேனும் ஒரு நூலுக்கான மதிப்புரையை எழுதுக.

குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப் பொருள் - மொழிநடை வெளிப்படுத்தும் கருத்து-- நூல் கட்டமைப்பு-- நூலாசிரியர்- நூலை குறித்த பொதுவான கருத்து.

**நூலின் தலைப்பு** : தமிழ் சான்றோர்கள்.

**நூலின் மையப் பொருள்** : தமிழுக்குத் தொண்டு செய்த சான்றோர்களின் அரும்பணிகள்.

**மொழிநடை** : எளிமையான ஆற்றொழுக்கான நடை. சிறு சிறு தொடர்கள். கண்ணாடியைப் போல தெளிவான பொருள் விளக்கம். இடையிடையே போதிய கவிதைச் சொற்றொடர்கள் நூலுக்கு அழகு சேர்க்கிறது.

## வெளிப்படுத்தும் கருத்து :

உலகின் மூத்த மொழி நம் தமிழ் மொழி உயர் தனிச் செம்மொழி. இனிமை வளமை நிறைந்த மொழி. இந்நூல் தமிழ் மொழியில் சிறந்த புலமை , தமிழ் இலக்கியம் பற்றிய அழுத்தமான தெளிவு, படைப்பாற்றல், ஆகியவை தமிழ் புலவர்கள் இடம் நிறைந்து விளங்கியதை இந்நூல் விளக்குகிறது.

## நூல் கட்டமைப்பு :

தரமான தாளில் தெளிவாக அச்சடிக்கப்பட்டு அமைந்துள்ளது. வரிக்குவரி போதுமான இடைவெளி. படங்களுடன் விளக்கம். என்றும் பிரியாத நிலையில் நூல் கட்டமைப்பு அமைந்துள்ளது.

## நூலாசிரியர் :

தமிழ் இலக்கிய நூல்கள் 15க்கும் மேற்பட்டவற்றை எழுதி சாதனை படைத்துள்ள அருளாளர் இரா . குழந்தை அருள் இந்நூலின் ஆசிரியர் ஆவார். சமய இலக்கிய உளவியல் வரலாற்று நூல்கள் பலவற்றை படைத்து சாதனை படைத்துள்ளார். பாளையங்கோட்டையைச் சார்ந்த இவ்வாசிரியரின் இலக்கிய பணி தொடரட்டும்.

## நூலைக் குறித்த பொதுவான கருத்து :

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பணியாற்றிய 20 புலவர்களின் வாழ்க்கை. அவர்களின் பணிகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. வெளிநாட்டிலிருந்து தமிழகம் வந்து தமிழ்ப் பணியாற்றிய புலவர்களின் தமிழ்த்தொண்டும் விளக்கப்பட்டுள்ளன.

## விடைக்குறிப்பு தயாரிப்பு :


# R.MANIKANDAN B.T ASST IN TAMIL

## இரா. மணிகண்டன் பட்டதாரி தமிழாசிரியர்

அரசு மேல்நிலைப்பள்ளி

வலையூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 621005.

## அலைபேசி எண்: 9789334642.